[16th March 1966

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) 324.

(b) Men—7.
Women—Nil.

மாவட்டக் கல்விக் கண்காணிப்பாளர்கள்

** 316. கேள்வி—திரு. சீ. சிவசுப்பிரமணியன்: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

(அ) சென்னை மாநிலத்தில் பணியாற்றும் மொத்த மாவட்டக் கல்விக் கண்காணிப்பாளர்கள் D.E.O. எத்தனை பேர்?

(இ) இவர்களில் ஹரிஜன வகுப்பைச் சார்ந்தவர்கள் எத்தனை பேர்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) 45.

(b) Nil.

ஆரம்பச் சுகாதார நிலையங்கள்

** 306. கேள்வி—திரு. து. ப. அழகமுத்து: கனம் சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா:*

(அ) நகரப் பஞ்சாயத்தில் ஆரம்பச் சுகாதார நிலையங்கள் திறக்கப்பட்டிருக்கின்றனவா?

(இ) ஆமெனில், எத்தனை நகரப் பஞ்சாயத்துக்களில் திறக்கப்பட்டுள்ளன?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: *(அ) ஆம். ஆனால், அந்த ஆரம்பச் சுகாதார நிலையங்கள் நகர பஞ்சாயத்துகளுக்காக மட்டும் தொடங்கப்படவில்லை.*

(இ) 34 நகர பஞ்சாயத்துகளில் ஆரம்பச் சுகாதார நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

திரு. மா. தண்டாயுதபாணி: *தலைவர் அவர்களே, இந்த ஆரம்ப சுகாதார நிலையங்கள் வைத்திய வசதி பெறுவதற்கு வாய்ப்பில்லாத குறிப்பிட்ட கிராமங்களில் வைத்திய வசதி ஏற்படுத்திக் கொடுப்பதற்காக ஆரம்பிப்பதாகத் திட்டத்திலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. கட்டட வசதி இல்லை என்ற காரணத்தினால் நகர் புறத்தில் ஆரம்பித்தால் நோக்கமே ஈடேறாத நிலைமை ஏற்பட்டு விடுகிறது. இதை மீண்டும் பரிசீலனை செய்து கூட்டு மன்றங்களில் தீர்மானம் போட்டு எந்தக் கிராமத்தில் ஆரம்பிக்க வேண்டும் என்று சொல்லுகிறார்களோ அந்தக் கிராமப் பஞ்சாயத்திலேயே அதை ஆரம்பிக்க அரசாங்கம் ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.*

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: *டவுன் பஞ்சாயத்திலே ஏற்படுத்தப்பட்டாலும் கூட சுற்றி இருக்கக் கூடிய பல பஞ்சாயத்துக்களுக்கு அது பயன்படுகிறது. அதனால் மருத்துவ வசதி*